# சங்கத் தமிழர் பண்பாட்டு அடையாளங்களில் தனிமனிதப் பண்புநலன்கள்

# Individual Virtues in the Cultural Identity of Sangam Tamils

*முனைவர் தே. இராணி எலிசபெத்*
தமிழ்த்துறைத் தலைவர்
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, சென்னை, தமிழ் நாடு, இந்தியா

**Dr. D. Rani Elizabeth**
*Head, Department of Tamil*
*Soka Ikeda College of Arts and Science for Women*
*Chennai, Tamil Nadu, India*

**Citation**: Rani Elizabeth, D. "Individual Virtues in the Cultural Identity of Sangam Tamils." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 3, 2025, pp. 74-86.

## ஆய்வுச் சுருக்கம்

*சங்கத் தமிழர்கள், வாழும் முறையறிந்து வாழ்ந்தனர். தனிமனிதப் பண்புகளில் மேலோங்கிய நிலையில் இருந்தனர். நற்பண்புகளைப் பெற்று, அவற்றை வாழ்க்கையில் கடைபிடித்து, தன்னையும் தன் சுற்றத்தாரையும் காத்து மகிழ்ந்திருந்தனர். எதையும் தேவைக்கேற்பவே பெற்றிருந்தனர். அதற்காக உழைத்தனர். தங்களின் கடமைகளில் உறுதியாக நின்றனர். பொறுப்புகளைத் தட்டிக் கழிக்காமல் செயலாற்றினர். இவற்றையெல்லாம் வரலாற்று ஆதாரங்களான சங்க கால இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. மக்கள் பலர் கூடி வாழும் சமுதாயக் கூட்டுறவிலிருந்து தோன்றிய சங்க கால இலக்கியங்களில் பொதிந்துள்ள, தனிமனிதனின் பண்பாட்டு அடையாளங்களில் தனிமனிதனின் பண்புநலன்களை ஆய்ந்து காட்டுவதாக அமைகிறது இவ்வாய்வுக் கட்டுரை.*

***திறவுச்சொற்கள்:*** *சங்கத் தமிழர், தனிமனிதப் பண்புகள், பண்பாட்டு அடையாளங்கள்*

## Abstract

*The Sangam Tamils lived with a deep understanding of life and upheld high standards in individual virtues. They embraced good qualities, adhered to them in their daily lives, and safeguarded both themselves and their communities while living in harmony. They acquired only what was necessary, worked diligently for it, and remained steadfast in their duties. They fulfilled their responsibilities without evasion. These traits are well-documented in the historical sources of Sangam-era literature. Originating from a communal society where people lived together in cooperation, Sangam literature reflects the cultural identities of individuals and highlights their personal virtues. This research article aims to analyze and illustrate the individual virtues in the Cultural Identity of Sangam Tamils embedded within these literary works.*

***Keywords:*** *Sangam Tamils, Individual virtues, Cultural identities.*

## முன்னுரை

*சங்கத் தமிழரின் வாழ்வியல் பெட்டகமாகவும் தனி மனித வாழ்வின் கருவூலமாகவும் சமுதாயத்தின் செயல்பாடுகளை எடுத்துக்காட்டும் சங்க கால இலக்கியங்கள் தமிழரின் வரலாற்றுச் சான்றுகள். தொல்காப்பியமும் பாட்டும் தொகையும் தமிழரின் வாழ்வியல் பண்பாட்டு அடையாளங்களின் சான்றாதாரங்கள். அனைவரும் துய்க்கும் வகையில் திறந்து வைக்கப்பட்டுள்ள இக்கருவூலங்களைப் பயன்படுத்தி இன்றைய சமுதாய வளர்ச்சியை மேம்படுத்த வேண்டியது தனிமனிதனின் கடமையாகும். மக்கள் பலர் கூடி வாழும் சமுதாயக்*

*கூட்டுறவிலிருந்து இலக்கியம் முகிழ்க்கும் என்று கொள்க. சமுதாயப் பெருங்களம் இன்றேல் மக்கட்கு வினையாற்றும் நாகரிகப் பாங்குகளும் தோன்றா. வேறுபட்ட எண்ணங்கள், வேட்கைகள், எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்களெல்லாம் ஒழுக்கப்பாடெல்லாம் சமுதாய நிலைபேற்றுக்குத் தானே வேண்டப்படுகின்றன. ஆக தமிழர் கண்ட அகவிலக்கியக் கட்டிடத்துக்கு வேண்டும் துணைக் கூறுகளும் தமிழ்ச் சமுதாயத்திலிருந்தே கிடைத்தன என்பது என் கருத்து. ஈராயிரம் ஆண்டுக்கு முற்பட்ட தமிழினச் சமுதாய வாழ்வைச் சங்கப்பாடல்களே காட்டுகின்றன (டாக்டர் மு. வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, பக். 99) எனத் தமிழ் இனத்தின் சமுதாய வாழ்க்கையைச் சங்கப் பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. சங்கத் தமிழர்களின் பண்பாட்டைப் பறைசாற்றும் தனிமனிதனின் பண்புநலன்களை எடுத்துக்காட்டுகிறது இவ்வாய்வுக் கட்டுரை.*

**தமிழர்**

*தமிழர் தமிழகத்திலேயே பிறந்த ஆதிகுடிகள் என்பது லெமூரியக் கொள்கையினரின் முடிவு. (டாக்டர் கே.கே. பிள்ளை, தமிழக வரலாறும் பண்பாடும், பக். 29). மேலும் திராவிட மரபினரில் தொன்மையான மரபுப் பின்னணியை உடையோர் தமிழரே. இதனை அவர்களின் இலக்கிய இலக்கண வாழ்வியல் சிறப்புகள் உணர்த்தும். (டாக்டர் க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், பக். 11). ஆகவே, தமிழர்கள் என்போர் தமிழகத்தின் ஆதிகுடிகள் என்பதை இவ்விருவரின் கருத்துகள் உறுதிப்படுத்துகின்றன.*

**தமிழரின் தனிமனிதப் பண்புகள்**

*சங்கப் பாடல்கள் அக்கால மாந்தர்களின் இயல்புகளை எடுத்துக்காட்டி நிற்கின்றன. மனித இன நிலைப்பேற்றிற்கான காரணம் அவரவருடைய பண்புகள், அதிலும் நற்பண்புகள்தான் முக்கியக் காரணமாக அமைகின்றன என்பதில் சற்றேனும் எதிர் கருத்து இருக்கவில்லை. நற்பண்பு என்பது, சரியான தவறில்லாத கருத்துகளினாலும், நல்லறிவினாலும் உருவாகிறது. மனித உயிர்களுக்கு மட்டுமே மன அல்லது அறிவாற்றல் வழங்கப்பட்டிருத்தலாலும், நற்பண்புகளை வளர்த்தல் அவர்களால் மட்டுமே இயலுமாதலாலும், தொல்காப்பியர் மற்ற உயிரினங்களைக் கருதாமல், மனித உயிர்களை மட்டுமே யாவற்றினும் உயர்ந்த வகுப்பாக, அல்லது உயர்திணையாக வகைப்படுத்தினார். மற்றெல்லாத் தாழ்ந்த வகை உயிர் இனங்களும், உயிரில்லாத பொருள்களோடு சேர்த்து கீழான வகுப்பு அல்லது அஃறிணை எனப்பட்டன. நன்னடத்தை அல்லது நற்பண்பு ஒன்றுதான் மனிதரை மற்றெல்லா கீழ்நிலைப்பட்ட உயிரினங்களினின்றும் வேறுபடுத்தி உயர்த்துவதாகையால், பண்டைத் தமிழர், நற்பண்புக்கு மிகுந்த சிறப்பு அல்லது முக்கியத்துவம் அளித்தனர். (முனைவர் சூரியநாராயணன், தமிழ்நாட்டு வரலாற்றின் இலக்கிய ஆதாரங்கள், பக். 102). நற்பண்புகள் மனிதனை உயர்ந்த நிலைக்குக் கொண்டுச் செல்லும்.*

**நற்பண்புகள்**

*நற்பண்புள்ள மனிதன் அனைவராலும் விரும்பப்படுவான். பண்பில்லாதவர்களை எவரும் விரும்பமாட்டார். இதனை,*

***மண்கெழு தானை ஒண்பூண் வேந்தர்***
***வெண்குடைச் செல்வம் வியத்தலோ இலமே***
***எம்மால் வியக்கப் படூஉ மோரே***

***இடுமுட் படப்பை மறிமேய்ந் தொழிந்த***
***குறுநறு முஞ்ஞைக் கொழுங்கண் குற்றடகு***
***புனபுல வரகின் சொன்றியொடு பெறூஉம்***
***சீறூர் மன்ன ராயினும் எம்வயின்***
***பாடறிந் தொழுகும் பண்பி னோரே***
***மிகப்பே ரெவ்வம் உறினும் எனைத்தும்***
***உணர்ச்சி யில்லோர் உடைமை உள்ளேம்***
***நல்லறி வுடையோர் நல்குரவு***
***உள்ளுதும் பெருமயாம் உவந்துநனி பெரிதே*** *(புறநானூறு 197: 7-18)*

*இப்புறப்பாடல், நான்கு பெரும்படையை உடைய பெரிய நாட்டின் மன்னராக இருந்தாலும் பண்பில்லாதவருடைய செல்வத்தைக் கண்டு வியக்காமல், சிற்றூர் மன்னராக இருந்தாலும் பண்புடையராக இருந்தால் அவரை மதிப்பதும், மிகப்பெரிய துன்பத்தில் இருந்தாலும் இரக்க உணர்வு இல்லாதவர்களின் செல்வம் பெறப்படுவதில்லை என்று கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் கூறுவதன் வழி நற்பண்பின் இன்றியமையாமையை அறியமுடிகிறது.*

**அன்புடைமை**

*தனிமனித நற்பண்புகளில் தலையாயப் பண்பு அன்புடைமை. மனிதர்கள் ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் அன்பே சமுதாய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அடிகோலும். இருவர் ஒன்று சேரும் குடும்பத்தில் தலைவனையும் தலைவியையும் ஒன்றாகப் பிணைத்து வைப்பது அன்பு. இல்லறம் நல்லறமாக அன்பு முக்கியமானதாகும். அன்பிலிருந்துதான் மற்ற நற்பண்புகள் தொடங்குகின்றன. இவ்வுண்மை,*

***அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்***
***நண்பென்னும் நாடாச் சிறப்பு*** ***(திருக்குறள்: 74)***

*அன்பு என்ற நற்குணம் பிறரிடம் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தருகின்றது. அவ்வன்பு, அனைவரையும் நட்பாகக் கொள்ளும் சிறப்பை வழங்குகிறது என்கிறார் வள்ளுவர். மேலும் புறநானூற்றில்,*

***முற்றிய திருவின் மூவ ராயினும்***
***பெட்பின் றீதல் யாம்வேண் டலமே*** *(புறநானூறு 197: 1-2)*

*மிகுந்த செல்வமுடைய மூவேந்தர் பொருளை வழங்கினாலும், அன்பில்லாமல் தரும் பொருளைப் புலவர்கள் விரும்பமாட்டார்கள் என்று பெருந்தலைச்சாத்தனார் கடிய நெடுவேட்டுவனிடம் கூறியதிலிருந்து கொடையும் அன்புடனே வழங்கப்பட்டது. அன்பில்லாமல் கொடுக்கப்படும் பொருள் பெற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பது தெளிவாகிறது. தாளாண்மை, தன்மானம், நன்றி மறவாமை என்பன தமிழரின் பண்பாட்டுக் குணங்களாகும். இப்பண்பாட்டு அடையாளங்களைப் பல சங்கப் பாடலடிகளில் அறியமுடிகிறது. மேலும்,*

***யாதும் ஊரே யாவரும் கேளிர்***
***தீதும் நன்றும் பிறர்தர வாரா***
***நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன***
***சாதலும் புதுவ தன்றே வாழ்தல்***
***இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்***
***இன்னா தென்றலும் இலமே மின்னொடு***

***வானம் தண்துளி தலைஇ ஆனாது***
***கல்பொருது இரங்கும் அல்லல் பேர்யாற்று***
***நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்***
***முறைவழிப் படூஉம் என்பது திறவோர்***
***காட்சியில் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்***
***பெரியோரை வியத்தலும் இலமே***
***சிறியோரை யிகழ்தல் அதனினும் இலமே (புறநானூறு 192)***

*இப்புறப்பாடலடிகளில், எந்த ஊரும் சொந்த ஊர், எல்லோரும் உறவினர்கள்; ஒருவரின் இன்ப துன்பத்திற்கு அவர் மட்டுமே காரணம், வாழ்விலும் தாழ்விலும் இணைந்து இருக்க வேண்டும்; நடப்பவை எல்லாம் ஊழால் என்பதை உணர்ந்து பெரியோர் சிறியோர் என்னும் வேறுபாடு வேண்டாம் என்பன போன்ற பல சிறந்த தனிமனித வாழ்விற்குரியனவற்றை கணியன் பூங்குன்றனார் காட்டியுள்ளார். தமிழனின் பெருமையை எடுத்துக்காட்டும் இவ்வரிகளை உலகத்திலுள்ளோர் பின்பற்றி வாழ்க்கையை அமைத்துக்கொண்டால் அமைதி நிலவும்.*

**ஈதல்**

*பொருள் வேண்டுவோர்க்குத் தம்மால் இயன்றவற்றைக் கொடுக்க வேண்டும் என்பது சங்கத் தமிழரின் கொள்கையாகும். அவர்கள், ஈட்டியப் பொருளைத் தான் மட்டும் துய்த்தலில்லாமல் மற்றவருக்கும் வழங்கி மகிழ்ந்து வாழ்ந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனை,*

***செறாஅது ஈதல் இரந்தார்க்கு ஒன்று ஆற்றாது வாழ்தலின்***
***சாதலும் கூடுமாம் மற்று (கலித்தொகை கு.கலி - 61:11,12)***

*தேவையை உடையோர்க்கு ஒன்றும் உதவாமல் இவ்வுலகில் உயிர் வாழ்வதைக் காட்டிலும் இறந்து போதல் நலம் என்று குறிஞ்சிக்கலியில் கபிலர் ஈதலின் இன்றியமையாமையை எடுத்துரைக்கின்றார். மேலும்,*

***ஈயென இரத்தல் இழிந்தன் றதன்எதிர்***
***ஈயேன் என்றல் அறனினும் இழிந்தன்று***
***கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன் றதன்எதிர்***
***கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று (புறநானூறு 204:1-4)***

*வல்வில் ஓரியைக் கழைதின்யானையார் பாடிய இப்பாடல், மற்றவரிடத்தில் இரத்தல் என்பது இழிவானது, அவ்வாறு இரந்து நிற்பவருக்கு ஈயாதல் அதனினும் இழிவானது. பெற்றுக்கொள்ளுங்கள் என்று பொருளை வழங்குவது உயர்வானது, கொடுத்தப் பொருளை வாங்காமல் மறுத்தல் அதனைக்காட்டிலும் உயர்வானது என்கிறது. ஈதல் மற்றும் இரத்தலின் இயல்புகளை இவ்வடிகள் மூலம் அறிய முடிகிறது.*

**பிறரை மதிக்கும் பண்பு**

*சிறியவராக இருந்தாலும், பெரியவராக இருந்தாலும் பிறரை மதிக்கும் பண்பு மிகவும் உயரியதாகும். வறுமையில் இருந்தாலும் மதியாமல் கொடுக்கும் எதையும் ஏற்றுக் கொள்ள மாட்டார் தமிழர். இதனை,*

***குன்றும் மலையும் பலபின் னொழிய***
***வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென***
***நின்ற என்நயந் தருளி ஈதுகொண்***

***டீங்கனஞ் செல்க தானென என்னை***
***யாங்களிந் தனனோ தாங்கருங் காவலன்***
***காணா தீத்த இப்பொருட் கியானோர்***
***வாணிகப் பரிசிலன் அல்லேன் பேணித்***
***தினையனைத் தாயினும் இனிதவர்***
***துணையள வறிந்து நல்கினர் விடினே*** ***(புறநானூறு 208)***

*பெருஞ்சித்திரனார் அதியமான் நெடுமானஞ்சியிடம் பரிசில் பெறச் சென்றார். ஆனால் மன்னன், அவரைக் காணாமலே பரிசு கொடுத்தனுப்பினார். காணாமல், கொடுத்த பரிசிலைப் பெறுவதற்கு வணிகப் பரிசிலன் இல்லை என்று மறுத்ததன் வழி, மதியாதார், மன்னனாக இருந்தாலும் தமிழர் ஏற்றுக்கொள்ளார் என்பதையும் அறிய முடிகிறது. சுயமரியாதை, தன்மானம் ஆகிய இரண்டும் ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டிய பண்புகள்.*

**உயிர்கள் மேல் இரக்கம்**

*உயர்திணை, அஃறிணை என்ற வேறுபாடுகளற்ற வாழ்வியலைக் கொண்ட தமிழர்கள், உலக உயிர்களிடம் இரக்கங்காட்டும் பண்பைத் தொன்றுதொட்டு பின்பற்றி வருகின்றனர். இயற்கையோடு இயைந்த வாழ்ந்தவர்கள், காரணமில்லாமல் எவ்வுயிர்க்கும் துன்பம் இழைக்கமாட்டார்கள் என்ற உண்மையை நற்றிணைப் பாடல் எடுத்துக்காட்டுகிறது.*

***புணரி பொருத பூமணல் அடைகரை***
***ஆழி மருங்கின் அலவன் ஓம்பி***
***வலவன் வள்பு ஆய்ந்து ஊர***
***நிலவு விரிந்தன்றால் கானலானே*** ***(நற்றிணை 11:6-9)***

*அலைகள் மோதும் ஒலிபொருந்திய மணல் நிறைந்த கடற்கரையின் கரையில் செலுத்தப்படும் வண்டியின் சக்கரங்களின் அடியில் நண்டுகள் அகப்படாமல் இருக்குமாறு, தேர்ப்பாகன் குதிரைகளின் வாரைப் பிடித்து இழுத்து மிகவும் கவனமாகத் தேரைச் செலுத்தினான் என்ற அடிகளால் சிற்றுயிர்களிடமும் இரக்கம் கொண்டவர் தமிழர் என்பது தெளிவடைகிறது.*

**மனித நேயம்**

*தமிழர்கள் பிறர்படும் துன்பத்தைக் கண்டால் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள். துன்பத்தைக் களைவதற்கான வழியைக் கண்டறிந்து, அவர்களுக்கு உதவி செய்ய முன்வரும் மனிதத்தன்மை உடையவர்கள். சங்க இலக்கிய நற்றிணையில், மிளைகிழான் நல்வேட்டனார், செல்வத்தின் இயல்பை எடுத்துக்கூறுவதுடன் உண்மையான செல்வம் எது என்பதனையும் காட்டுகிறார். இதனை,*

***நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்***
***செல்வம் அன்று தம்செய் வினைப்பயனே***
***சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்***
***புன்கண் அஞ்சும் பண்பின்***
***மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே*** ***(நற்றிணை 210:5-9)***

*வலிமையை வெளிப்படுத்தி வஞ்சினம் உரைப்பதும் சிறப்புடன் பகட்டாகச் செல்வதும் செல்வம் ஆகாது. சேர்ந்திருக்கும் மற்றவர் படும் துன்பத்தைக் கண்டு அஞ்சி அவர்களுக்கு உதவுவதே சான்றோர் மதிக்கும் செல்வம் என்கிறார். பிறர் துன்பத்தினைக் கண்டு*

*நகையாமல் அவர்களின் துன்பத்தினைப் போக்குவதே மனித நேயம் என்பதனை உணர்ந்து வாழ்ந்திருக்கின்றனர் பண்டைத் தமிழர்.*

**நட்பு**

*பண்டை இலக்கியங்களில் தமிழர்களின் அன்பின் மிகுதியால் தோன்றும் நட்பின் சிறப்பைப் பல பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. தமிழர்கள் நட்புக் கொண்டவர்கள் மீது மிகவும் நம்பிக்கை உடையவர்களாகவும் அவர்களின் நலனில் அக்கறை உடையவர்களாகவும் இருந்திருக்கின்றனர். நட்பின் உறுதித் தன்மையை நற்றிணைப் பாடல்,*

***முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்***
***நஞ்சும் உண்பர் நனி நாகரிகர் (நற்றிணை 355:6-7)***

*என மிகுந்த கண்ணோட்டமுடையவர்கள், பழைமையான நட்புக் கொண்டவர்கள் நஞ்சைக் கொடுத்தாலும், நஞ்சு என்று அறிந்தும் உண்பார்கள் என்கிறது. நட்புப் பாராட்டுதல் பண்டைத் தமிழர்களின் குணங்களில் முக்கியமான ஒன்றாகும். இதனைத் திருக்குறள்,*

***பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க***
***நாகரிகம் வேண்டு பவர் (திருக்குறள் 580)***

*என விரும்பத்தக்க கண்ணோட்டத்தை வேண்டுபவர்கள் நட்பாக உள்ளவர் தமது உணவிலே நஞ்சை ஊற்றுகிறார் என்பதைக் கண்டும் அதனை வெறுக்காமல் உண்டு அவரோடு நட்பாகவே இருப்பர் என்கிறது. அனைத்து உறவுகளைக் காட்டிலும் நட்பு என்ற உறவு தலைச்சிறந்த உறவாகக் கருதப்படுகிறது. நண்பனுக்காக உயிரையும் கொடுக்கும் தன்மை உடையவர்களாகப் பண்டைத் தமிழர்கள் இருந்தார்கள் என்பதற்குக் கோப்பெருஞ் சோழன் பிசிராந்தையார் நட்பு சான்றாகும். மேலும், ஆண் பெண் நட்பிற்குச் சான்றாகத் திகழ்பவர்கள் ஔவையாரும் அதியமானும்.*

***பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட***
***சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது***
***ஆதல் நின்னகத்து அடக்கிச்***
***சாதல் நீங்க, எமக்கு ஈத்தனையே (புறநானூறு 91)***

*இவ்வடிகளில் தொன்றுதொட்டுப் பெரிய மலை வெடிப்பில் பெறுவதற்கு அரியதான, சிறியிலை நெல்லிப் பழம் ஒன்றை உண்டால் சாகாமல் நீண்டநாள் உயிர் வாழ முடியும் என்பதை அறிந்தும் அதியமான், ஔவையார் சாகாமல் நீண்டநாள் வாழ வேண்டும் என்று எண்ணி அவருக்குக் கொடுத்ததைத் தெளியமுடிகிறது. உயிரைக் காட்டிலும் நட்பை மேலானதாகச் சங்கத் தமிழர் கருதினர் என்பது புலப்படுகிறது.*

**இல்லாதவர்க்கு உதவுதல்**

*உதவி செய்தல் என்பது தமிழரின் மரபாகவே போற்றப்பட்டு வந்திருக்கிறது. அறிந்தவர் அறியாதவர், தெரிந்தவர் தெரியாதவர், என்று நினைக்காமல் அனைவருக்கும் இரங்குதல் தமிழரின் மரபு. இதனைப் பண்டை காலம் தொட்டே தனிமனிதப் பண்பாகக் கொண்டுள்ளனர் என்பது சங்க இலக்கியங்கள் தெளிவுறுத்தி நிற்கின்றன.*

***நிறைந்தோர்த் தேரும் நெஞ்சமொடு குறைந்தோர்***
***பயன் இன்மையின் பற்றுவிட்டு ஒரூஉம்***
***நயனில் மாக்கள் போல வண்டினம் (அகநானூறு 71:1-3)***

*அந்தியிளங்கீரனரின் இவ்வடிகள், செல்வம் உள்ளவர்களிடம் சேர்ந்து இருப்பதும், செல்வம் இல்லாதவர்களை விட்டு நீங்குவதும் தமிழிரின் மரபன்று என்கின்றன. இல்லாதவர்க்குத் தன்னால் முடிந்த உதவியைச் செய்ய வேண்டும் என்பதை உணரமுடிகிறது.*

**மனச்சாட்சி**

*தனி மனிதனின் மனதை மற்றவர்களால் அறிய முடியாது. அது அவர்களால் மட்டுமே உணர முடியும். நாம் செய்யும் தவறுகளுக்கும் குற்றங்களுக்கும் தகாத செயல்களுக்கும் யாரும் சாட்சியாக இல்லையென்றாலும் அவரவர்களின் மனமே சாட்சியாக நிற்கும். இதனை அறிந்து செயல்பட வேண்டும். நம்மைப் பிறர் அறியவில்லை, ஆதலால் குற்றம் இழைக்கலாம் என்று எண்ணுபவர்களின் மனம், அவர் செய்த குற்றத்தை மறக்காது. ஆதலால் அவருக்கு மனவேதனை தோன்றுவது இயற்கை என்பதை,*

***கண்டவர் இல் என உலகத்துள் உணராதார்,***
***தங்காது, தகைவின்றித் தாம்செய்யும் வினைகளுள்***
***நெஞ்சறிந்த கொடியவை மறைப்பினும், அறிபவர்***
***நெஞ்சத்து குறுகிய கரியில்லை ஆகலின் (கலித்தொகை 125:1-4)***

*இவ்வடிகள் காட்டுகின்றன. தீமையைக் கண்டு ஒதுங்க வேண்டும். ஒதுங்காமல் நம்மைக் கண்காணிப்பவர் இல்லை, தீச்செயல்களைச் செய்யலாம் என்று செய்தால், உலகக் கண்களுக்கு அவற்றை மறைக்க முடியும். ஆனால் அவர்களுடைய நெஞ்சத்திற்கு என்றும் மறைக்க முடியாது. நெஞ்சத்தை விடவும் வேறொரு சாட்சி தேவையி'ல்லை என அறிவுறுத்தி நிற்கிறது இப்பாடல்.*

***மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்***
***ஆகுல நீர பிற (திருக்குறள் 34)***

*இக்குறட்பாவில் வள்ளுவர், ஒருவன் தன் மனதில் குற்றம் இல்லாமல் இருப்பதே அறம் என்கிறார். பண்டைத்தமிழர்கள் மனசாட்சியுடன் நடந்து கொண்டனர். குற்றம் இல்லாத வாழ்வியலை விரும்பி வாழ்ந்திருக்கின்றனர் என்பது தெளிவு.*

**நன்னடத்தை**

*பண்டைத் தமிழர்கள் நல்லொழுக்கத்திலே நாட்டமுடையவர்கள். உயிரினும் சிறந்தது ஒழுக்கம் என்ற உண்மையை உணர்ந்தவர்கள். அறநெறிக்கு மாறான செயல்களைச் செய்யாதவர்கள். அறநெறிக்குத் தடையாக நிற்கும் அனைத்தையும் அறிந்து அவற்றைப் பின்பற்றாமல் பாதுகாத்து வாழ்ந்தவர்கள். இதனை,*

***சினனே, காமம், கழி கண்ணோட்டம்,***
***அச்சம், பொய்ச் சொல், அன்புமிக உடைமை,***
***தெறல், கடுமையொடு பிறவும் இவ்வுலகத்து***
***அறந்தெரி திகிரிக்கு வழியடையாகும் (பதிற்றுப்பத்து 22:1-4)***

*பொருளற்ற கோபம், காமம், அளவுக்கு மீறிய தயவு, பகைவர்களுக்குப் பயப்படுதல், பொய் கூறல், பொருளின் மேல் பேராசை, நன்மைகளை நாசம் பண்ணுதல், கடுமையான சொற்களைக் கூறுதல் போன்ற குணங்கள், இவ்வுலகில் அறநெறியில், செல்லுபவர்களுக்குச் செல்லுகின்ற வழியிலே போடப்படும் முட்டுக்கட்டைகள். இதனை அறிந்து, அறநெறியில் வாழ்பவர்கள் இவற்றையெல்லாம் நீக்க வேண்டும் என்பதை இப்பாடலடிகள் விளக்குகின்றன. மனிதன் தீமைகளையும் கெட்டவைகளையும் நீக்கினால் இன்பமான வாழ்க்கையை வாழமுடியும் என்பதை ஒவ்வொரு சங்கப்பாடலடிகளும் அறிவுறுத்தி நிற்கின்றன.*

**விருந்தினரைப் பேணல்**

*விருந்து என்பதற்குப் புதுமை என்று பொருள். புதியவரைப் பேணுதல் விருந்தோம்பல் எனத் தமிழர் கருதினர். விருந்தோம்பலில் தமிழர்கள் தலைச் சிறந்தவர்கள். தமிழ் இலக்கியங்கள் எல்லாவற்றிலும் தமிழர்களின் இச்சிறந்த பண்பு இடம்பெற்றிருப்பதை அறிய முடிகிறது. இல்லறத்தில் வாழ்பவர்கள் கடமைகளில் விருந்துபுரத்தல் என்பது சிறந்த கடமையாக இருந்திருக்கிறது. விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் நினைக்கின்றனர். உறவினர் என்பவர் வேறு, விருந்தினர் என்பவர் வேறு. முன்பின் அறியாத புதியவர்கள் விருந்தினர் ஆவர். புதியவர்கள் எவராக இருந்தாலும், எந்த நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும், எம்மொழி, எவ்வினத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர்களை வரவேற்று, உபசரிப்பது தமிழர் பண்பு. விருந்தோம்பல் பண்பு இல்லறத்தில் ஆணுக்கும் பெண்ணுக்குமானது ஆகும். இதனால் குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும் என்பதை,*

***புகை யுண்டு அமர்த்த கண்ணள் தகைபேற***
***பிறை நுதற் போறித்த சிறுநுண் பல்வியர்***
***அம்துகில் தலையில் துடையினள் நப்புலந்து***
***அட்டிலோளே அம் மா அரிவை***
***எமக்கே வருகதில் விருந்தே சிவப்பாள் அன்று***
***சிறய முள் எயிறு தோன்ற***
***முறுவல் கொண்ட முகம் காண்கம்மே (நற்றிணை 120:6-12)***

*இவ்வடிகளில் தலைவனுடன் கோபித்துக் கொண்டு சமையற்கட்டில் சமைத்துக் கொண்டிருந்தாள் தலைவி. மனைவியின் முகத்தில் கோபம் தணிந்து, சிறிய முட்கள் போன்ற பற்கள் தெரியுமாறு புன்சிரிப்பைக் காண, இல்லத்திற்கு விருந்தினர்கள் வர வேண்டும் என்று கணவன் நினைக்கிறான். இதன் வழி விருந்தினரை முகம் மலர்ந்து வரவேற்கும் தமிழர்களின் சிறந்த பண்பையும் விருந்தினர்களால் இல்லத்தில் மகிழ்ச்சியுண்டாகும் என்பதனையும் அறியமுடிகிறது. மேலும், விருந்தோம்பல் என்பது தமிழர்களுக்கே உரிய தலைமுறை தலைமுறையாகத் தொன்று தொட்டு வரும் பண்பாட்டு அடையாளம் என்பது தெளிவு.*

***நடுகல் கைதொழுது பரவல் ஒடியாது***
***விருந்து எதிர் பெறுகதில் யானே என்னையும் (புறநானூறு 306)***

*அள்ளூர் நன் முல்லையார் இவ்வடிகளில் மறக்குலப் பெண் தன் முன்னோர்களின் நடுகற்களை இடைவிடாது வணங்கி, விருந்தினர் தம் இல்லத்திற்கு வர வேண்டும் என்று வேண்டுவதாகக் கூறியுள்ளதன் வழி, விருந்தினரைப் பேணுதல் தலையாய கடமைகளில் ஒன்றாகக் கருதப்பட்டது அறியமுடிகிறது.*

**பெண்களின் பண்பாட்டுக் குணங்கள்**

*பெண்கள் தங்களுக்குரியப் பண்பாட்டுக் குணங்களில் சிறந்து விளங்கினர். மறக்குல மகளிர் மறப்பண்பு, தன்மானம், அரசப் பற்று, நாட்டுப் பற்று முதலிய பண்பாட்டுக் குணங்களை உடையவராயிருந்தனர் (ஞா. தேவநேயப் பாவாணர், பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், பக். 173). கணவன் பிரிவினால் உள்ளத்திலே கவலை தோன்றுவது இயற்கை, அக்கவலையை வெளியில் காட்டாமல் மறைத்துக் கொள்ளுவது கற்பின் மாண்பாக இருந்திருக்கிறது. இதனை,*

***துறந்து ஓர் தேஎத்து இருந்து நனிவருந்தி***
***ஆருயிர் அழிவதா யினும் நேர்இழை***

***கரத்தல் வேண்டுமானால் மற்றே பரப்புநீர்த்***
***தண்ணந் துறைவன் நாண***
***நண்ணார் தூற்றும் பழிதான் உண்டே (நற்றிணை 382:5-9)***

*என இப்பாடல் எடுத்துரைக்கிறது. மேலும் தம் செயல்களைக் கணவன் பாராட்ட வேண்டும் எனப் பெண்கள் விரும்புவார்கள். அவர்கள் மெய்வருந்திச் செய்திருக்கும் செயல்களைப் பழித்துப் பேசாமல், புகழ்ந்து பாராட்டினால் மனம் மகிழ்ச்சி அடைவார்கள். இது பெண்களின் இயல்பாக இருந்து வந்திருக்கிறது. பொருள் தேடப் போயிருக்கும் தலைவன் என்றும் நோயின்றி நலமுடன் வாழ வேண்டும் எனப் பெண்கள் எண்ணியிருக்கின்றனர். பெண்களின் குணங்களில் மிகவும் சிறந்த பண்பு இதுவே ஆகும். தம்மைச் சார்ந்தவர்கள் எவ்வித துன்பமும் இன்றி இனிது வாழ்ந்திருக்க வேண்டும் என நினைப்பார்கள். இதனை,*

***அழியாவிழவின் அஞ்சுவரு மூதூர்ப்***
***பழியிலர்; ஆயினும் பலர் புறங்கூறும்***
***அம்பல் ஒழுக்கமும் ஆகியர் வெம்சொல்***
***சேரியம் பெண்டிர் எள்ளினும் எள்ளுக***
***நுண்பூண் எருமை குடநாட்டன்ன என்***
***ஆய்நலம் தொலையினும் தொலைக் என்றும்***
***நோயிலராக நம் காதலர் வாய் வாள் (அகநானூறு 115:1-7)***

*எனும் இப்பாடலில் மனைவியின் உள்ளத்து அன்பைக் காண முடிகிறது. இயல்பாகவே பெண்களுக்கு இரக்க உணர்வும் அன்புணர்வும் மற்ற குணங்களைக் காட்டிலும் மேலோங்கி நிற்கும். சங்க காலத்தில் மகளிர் நிலை மிகவும் உயர்வுற்றிருந்தது. இல்லத்திற்கு மெய்யான அணிகலன் எனப் பெண்கள் மதிக்கப்பட்டனர். மேலும், சங்கப் பெண் மடலேறுதல் இல்லை. சங்க காலத்தில் பெண்கள் மடலேறுதல் குறித்த செய்திகள் காணப் பெறவில்லை. மடலேறுதல் பெண்டிர்க்கு அழகில்லை. என்பதனை,*

***கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்***
***பெண்ணின் பெருந்தக்க தில் (திருக்குறள் 1137)***

*இக்குறள் காட்டுவதன் வழி அறியமுடிகிறது. மேலும், பெண்களின் சிறந்த பண்பாக, இருமணம் கூடுதல் இல்லை என்பதைச் சங்க இலக்கியம் காட்டுகிறது.*

***விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்***
***அருநெறி ஆயர் மகளிர்க்கு,***
***இருமணம் கூடுதல்இல் இயல்பன்றே (கலித்தொகை 114:19-21)***

*கலித்தொகை அடிகள், விரிந்த திரை சூழ்ந்த கடலை ஆடையாக உடைய விரிந்த உலகத்தைப் பெற்றாலும் அரிய நெறியில் செல்லும் ஆயர் குலப் பெண்கள் காதலித்தவனை விட்டு, மற்றொருவனைத் திருமணம் செய்து கொண்டு வாழ்வது குடிப்பிறப்பின் தன்மையில்லை என்று எடுத்துரைக்கின்றது. பெண்கள் காதலித்தவனையே மணம் செய்து கொண்டு இனிய இல்லறம் நடத்தும் பண்பைப் பெற்று சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருந்திருக்கின்றனர் என்பதை அறியமுடிகிறது இவ்வடிகளில். பெண்கள், தம் வீட்டின் குறைகளைப் பிறர் அறிவதற்கு இடம் கொடுக்கமாட்டார்கள். வறுமையால் எவ்வளவுதான் வாடி வதங்கினாலும் தம் குடியின் பெருமையை விட்டுக்கொடுக்க மாட்டார்கள். மணமாகி சென்ற பெண்ணின் கணவன் குடும்பம் வறுமையடைந்ததைக் கண்டு, பெண்ணின் தந்தை அன்புடன் உணவுப் பொருள்களை அனுப்பி வைத்தால் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இது சிறந்த அறிவும் ஒழுக்கமும் நிறைந்த பெண்களின் பண்பாட்டுக் குணமாகும். இதனை,*

***அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனன் கொல்***
***கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்***
***கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள் (நற்றிணை 110:9-11)***

*என்ற அடிகள் செல்வச் சிறப்பில் வளர்கப்பட்ட பெண்ணாக இருந்தாலும், மணம் செய்விக்கப்பட்டதும் கணவன் குடும்ப நிலைக்கேற்றவாறு வாழத் தலைபட்டனர் என்பது தெளிவாகிறது. இதனால் இல்லறம் சிறக்கும். குடும்பத்திலுள்ளோர் மகிழ்வுடன் இருப்பர். இருப்பதைக் கொண்டு இன்பமாக வாழ்தல், தலைவியின் இல்லறப் பண்புகளில் முதன்மையானது.*

**குடும்ப அமைப்பில் ஆண்களுக்கும் பெண்களுக்குமான பண்புநலன்கள்**

*குடும்பம் என்பதற்கு உறவு, மனைவி, வீடு, இல்வாழ்க்கை, குலம், குடி ஒரு குடியில் உள்ளவர்கள் என்னும் பொருளை மணிமேகலைத் தமிழ்ச் சொல்லகராதி குறிப்பிடுகிறது. மனிதன் காட்டுமிராண்டியாகக் குகைகளிலும், மரப் பொந்துகளிலும் வாழ்ந்த காலத்தில் குடும்பம் என்ற அமைப்புத் தோன்றியிருக்கவில்லை. காலப்போக்கில் மனிதன் வளர வளர நாகரிகமும் பண்பாடும் வளர்ந்தன. அந்த வளர்ச்சிக்கு ஏற்ப குடும்பம் என்ற அமைப்பும் தோன்றியது. குடும்பம் என்ற அமைப்பும் மனித குல வளர்ச்சியில் ஒரு குறிப்பிடத்தக்க மிக முக்கியமான அம்சமாகும். குடும்பமே மனிதனை ஒழுங்குபடுத்தியது குடும்பமே மனிதனைச் சமுதாய விலங்காக மாற்றி அமைத்தது. அனைத்துச் சமுதாய நிறுவனங்களும் குடும்பம் என்ற அமைப்பின் மீதே நின்று நிலவுவதாயிற்று. பொதுவாகச் சொல்வதென்றால் குடும்பம், மனிதனைச் செழுமைப்படுத்துவதற்காகவும், அவனின் பாலியல் வேட்கைகளைச் செம்மைப்படுத்துவதற்காகவும் தோன்றியதாகும் (க. இந்திரசித்து, சேலம் மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள், பக். 86). மனித நாகரிக வளர்ச்சியின் அடையாளம் குடும்ப அமைப்பாகும். இரத்த சம்பந்தப்பட்ட உறவினர் சேர்ந்து வாழ்வதும், பொருளாதார முயற்சி களில் ஈடுபடுவதும் கணவன், மனைவி, மக்கள் என்ற நிலையில் சம்பந்தப்பட்டு நிற்பதே குடும்ப அமைப்பு.*

**குழந்தை வளர்ப்பு**

*பிள்ளைகள் வளர்க்கப்படுகின்ற முறையினாலேயே அவர்கள் பேரறிவுடன் நற்பண்புகளைப் பெற்றவராகின்றனர் என்பதைப் புறநானூறு எடுத்தியம்புகின்றது.*

***கிண்கிணி களைந்த கால் ஒண்கழல் தொட்டுக்***
***குடுமி களைந்த நுதல் வேம்பின் ஒண் தளிர்***
***நெடுங் கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து***
***குறுந்தொடி கழிந்த கைச் சாபம்பற்றி***
***நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய நின்றோன்***
***யார்கொல் வாழ்க அவன் கண்ணி தார்பூண்டு***
***தாலி களைந்தன்றும் இலனே பால்விட்டு***
***அயினியும் இன்று அயின்றனனே வயின் வயின்***
***உடன்று மேல் வந்த வம்ப மள்ளரை***
***வியந்தன்றும் இழிந்தன்றும் இலனே அவரை***
***அழுந்தப் பற்றி அகல்விசும்பு ஆர்ப்பு எழ***
***கவிழ்ந்து நிலம் சேர அட்டதை***
***மகிழ்ந்தன்றும் இகழ்ந்தன்றும் அதனினும் இலனே (புறநானூறு 77)***

*இடைக்குன்னூர் கிழார், செழியன் தன் இளம் பருவத்திலேயே போருக்குச் சென்று, எதிர்த்த பகைவரைக் கொன்று வெற்றிப் பெற்றான். சிறுவர்கள் காலில் அணியும் கிண்கிணி களைந்தான், குறுந்தொடி கழித்தான், தாலியை இன்னும் நீக்கான், இன்றுதான் முதன் முதலாகப் பால் அருந்துவதை விட்டு, சோறு உண்டான் போன்றவை, அவன் இளமைப்பருவத்தினை உடையவன் என்பதை உணர்த்துகின்றன. இத்தகைய இளையவனாக இருந்தாலும் போர் என்று வந்த வீரரைக் கண்டு வியக்கவும் இல்லை, தாழ்வாக எண்ணவும் இல்லை, பகைவரைக் கொன்று மகிழவும், தன்னையே புகழ்ந்து கொள்ளவும் இல்லை. இப்பண்புகள் அவன் இளமையிலேயே பெற்றிருந்தான் என்பதன் வழி அவன் வளர்க்கப்பட்ட முறையை எடுத்துக்காட்டுகிறது. சிறந்த பண்புகளை ஒரு தலைமுறை அடுத்த தலைமுறைக்குக் கடத்துவதை இவ்வடிகளில் தெளியமுடிகிறது.*

*சங்கத்தமிழர் கல்வியறிவில் சிறப்புற்றிருந்தனர் என்பது உண்மை. ஆண்களோடு பெண்களும் கல்வியறிவு பெற்றிருந்தனர் என்பதற்குப் பெண்பாற் புலவர்கள் சான்று. ஆகவே, பிள்ளை வளர்ப்பில் கல்வி முக்கியமான இடத்தினைப் பெறுகின்றது. இதனை புறநானூறு,*

***ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே***
***சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே*** ***(புறநானூறு 312:1-2)***

*மகனைப் பெற்று அவனைப் பேணி பாதுகாத்தல் தாயின் கடமை. அவனுக்குக் கல்வி, அதனைப் பெறுவதற்குரிய அறிவு, ஆகியவற்றை வழங்குவது தந்தையின் கடமை எனப் பிள்ளை வளர்ப்பில் கல்வியைக் கொடுத்தல் முக்கியமானதாகக் காட்டப்படுகிறது. குழந்தைகளைப் பேணி பாதுகாத்து, கல்வி வழங்குவது பெற்றோரின் கடமை என்பதைச் சங்கப்பாடலடிகளில் அறியமுடிகிறது.*

**குடும்பத்தைப் பேணல்**

*செல்வம் இல்லாவிட்டால் இல்லறத்தைச் சிறப்பாகவும் மகிழ்ச்சியாகவும் நடத்துதல் என்பது இயலாதது. தம்முடைய குடும்பத்தைப் பேண ஒவ்வொருவரும் தாமே வருந்தி உழைத்துப் பொருள் தேட வேண்டும். அந்தப் பொருளால் தாமும் இன்புற வேண்டும். பிறருக்கும் கொடுத்து உதவவேண்டும். பொருளீட்டச் செல்லும் கணவன் மனைவியிடம், முன்னோர் தேடி வைத்திருக்கும் செல்வத்தைச் செலவழித்துக் கொண்டிருப் போரைச் செல்வம் உள்ளவர் என்று எவரும் சொல்லமாட்டார். முன்னோர் சேர்த்து வைத்த செல்வத்தில் உழைக்காமல் வாழ்பவர்கள் வறுமையடைவார்கள். வறியவர்களின் இல்வாழ்வு, பிச்சையெடுத்து வாழ்வதைக் காட்டினும் இழிவான வாழ்வாகும் என்று தெளிவாக எடுத்துச் சொல்லி விளக்கிய பிறகு சென்றான் என்பதைச் சங்கப் பாடல் காட்டுகிறது.*

***உள்ளது சிதைப்போ ருளர்எனப் படாஅர்***
***இல்லோர் வாழ்க்கை யிரவினு மிளிவெனச்***
***சொல்லிய வண்மை தெளியக்காட்டிச்***
***சென்றனர் வாழி தோழி யென்றும்*** ***(குறுந்தொகை 283:1-4)***

*எனப் பாலை பாடிய பெருங்கடுங்கோ பாடிய இப்பாடல் பொருள் தேடப் போயிருக்கும் தன் தலைவனைப் பற்றித் தன் தோழியிடம் ஒரு தலைவி கூறுவது போலப் பாடப்பட்டது. இங்கு ஒவ்வொருவரும் தமது முயற்சியினால் பொருளீட்டி, மற்றவருக்கும் கொடுத்து வாழ வேண்டும் என்பதையும், பிரிவு துன்பம் தருவதாக இருந்தாலும், பிரிவின் காரணத்தைத் தெளிவாக மனைவிக்கு எடுத்துரைத்து பிரியும் ஆண்மகனின் குணத்தை உணரமுடிகிறது.*

**வாழ்வியல் நெறிமுறைகள்**

*வரலாற்றுச் சான்றாதாரங்களான சங்க இலக்கிய பாடல்கள் மனிதன் வாழ வேண்டிய நெறிமுறைகளை அறிவுறுத்தி நிற்கின்றன. பழந்தமிழக மக்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையை எடுத்துக்காட்டும் கலித்தொகைப் பாடல் ஒன்று வாழ்க்கையில் அனைவரும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை வரிசையாகப் பட்டியலிட்டுக் காட்டுகின்றது.*

***ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்;***
***போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை***
***பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்;***
***அன்பெனப்படுவது தன்கிளை செறாஅமை***
***அறிவெனப்படுவது பேதையார் சொல் நோன்றல்;***
***செறிவெனப்படுவது கூறியது மறாஅமை***
***நிறையெனப்படுவது மறை பிறர்அறியாமை***
***முறையெனப்படுவது கண்ணோடாது உயிர்வெளவல்;***
***பொறையெனப்படுவது போற்றாரைப் பொறுத்தல் (கலித்தொகை 133)***

*இவ்வடிகள், ஆற்றுதல் என்பது குடும்ப வாழ்க்கையில் வறுமை நிலையில் இருப்பவர்களுக்கு உதவி செய்தல். போற்றுதல் என்பது நட்பாகக் கூடியவர்களை எக்காரணத்தை முன்னிட்டும் பிரியக்கூடாது. பண்பு எனப்படுவது உலக ஒழுக்கத்தை அறிந்து, அதன்படி நடத்தல். அன்பு எனப்படுவது தன்னுடைய சுற்றத்தினர் மீது கோபம் கொள்ளாதல். அறிவு எனப்படுவது அறியாதார் தன்னைப் பார்த்துச் சொல்லும் சொல்லைப் பொறுத்தல். செறிவு எனப்படுவது கூறியது ஒன்றைத் தான் என்றும் மறவாமல் இருத்தல். நிறைவு எனப்படுவது மறைவான ஒன்றை மற்றவர் அறிந்துவிடாமல் காத்தல். முறை எனப்படுவது தீங்கு செய்தவர்கள் நமக்கு வேண்டியவர்களாக இருந்தாலும் அவர் மீது கண்ணோடாது அவர் செய்த குற்றத்திற்கு ஏற்றவாறு தண்டனை வழங்குதல். பொறை எனப்படுவது தன்னைப் போற்றாதவர்களிடம் பகை கொள்ளாது பொறுமையோடு இருத்தல் என வாழ்க்கையில் அனைவரும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளைச் சுட்டி நிற்கும் இப்பாடலடிகளின் வழி வாழ்ந்தால் துன்பமின்றி மகிழ்ச்சியோடு இருக்கலாம் என்பதை அறியமுடிகிறது.*

**முடிவுரை**

*இவ்வாய்வுக் கட்டுரையில், தனிமனிதப் பண்புகளில் அன்புடைமையின் இன்றியமையாமையும் ஈதலின் சிறப்பையும் சங்கப் பாடல்கள் வழி எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. பிறரை மதிக்கும் பண்பு, உயிர்களிடத்து அன்பு, மனித நேயத்தின் முக்கியத்துவம், நட்புணர்வின் மேன்மை, இல்லாதோருக்கு உதவுதல், மனசாட்சியின் அறிவுறுத்தல், நன்னடத்தையின் நன்மை, விருந்தினரைப் பேணும் முறை, விருந்தோம்பல் பண்பினால் குடும்பத்தில் நிலவும் மகிழ்ச்சி, சங்கத்தமிழ்ப் பெண்களின் பண்பாட்டுக் குணங்கள், குடும்ப அமைப்பில் ஆண்களுக்கும் பெண்களுக்குமான பண்புநலன்கள், குழந்தை வளர்ப்பு, குழந்தைகளுக்குக் கல்வியளித்தலின் சிறப்பு விளக்கமுற்றிருக்கின்றன. வாழ்வில் செல்வம் பெறுமிடம், செல்வத்தை ஈட்டுவதில் ஆண்களுக்குரிய கடமைகள், வாழ்வில் அனைவரும் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் சங்கப்பாடல்கள் வழி எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன. சங்கத் தமிழர் பெற்றிருந்த பண்பாட்டு அடையாளங்களான நற்பண்புகளைப் பெற்று, காட்டிச்சென்ற, வாழ்ந்து காட்டிய நெறிமுறைகளைப் பின்பற்றி வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை இவ்வாய்வுக் கட்டுரை எடுத்துக்காட்டி நிற்கிறது.*

**துணை நின்ற நூல்கள்**

1. இராகவையங்கார், ரா. குறுந்தொகை விளக்கம், அண்ணாமலைப்பல்கலைக்கழகம் கழகத் தமிழ் நூல் வெளியீடு, 1993.
2. சுவாமிநாதையர், உ. வே. புறநானூறு மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம், 1971.
3. தட்சிணா மூர்த்தி, அ. ஐங்குநுறூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
4. நாகராசன், வி. குறுந்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
5. பாலசுப்பிரமணியன், கு. வெ. நற்றிணை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
6. ஆலிஸ், ஆ. பதிற்றுப்பத்து, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
7. விசுவநாதன், அ. கலித்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
8. மோகன், இரா. பத்துப்பாட்டு மூலமும் உரையும் - 1, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
9. நாகராசன், வி. பத்துப்பாட்டு மூலமும் உரையும் - 2, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2004.
10. இந்திரசித்து, க. சேலம் மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள், தமிழரசி பதிப்பகம், 2000.
11. தட்சிணாமூர்த்தி, அ. தமிழர் நாகரிகமும் பண்பாடும், தமிழ் மண் பதிப்பகம், 2000.
12. பிள்ளை, கே. கே. தமிழக வரலாறும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2011.
13. வரதராசனார், மு. திருக்குறள் தெளிவுரை, கழக வெளியீடு, 2003.

**References**

1. Raghavayangar, R. *Kurunthogai Explanation*. Annamalai University Tamil Book Publication, 1993.
2. Swaminathayar, U. V. *Purananuru: Source and Text*. Dr. U. V. Sa. Publications, 1971.
3. Dakshinamurthy, A. *Ainkurunooru: Source and Text*. New Century Book House, 2004.
4. Nagarajan, V. *Kurunthogai: Source and Text*. New Century Book House, 2004.
5. Balasubramanian, K. V. *Natrinai: Source and Text*. New Century Book House, 2004.
6. Alice, A. *Pathitruppathu*. New Century Book House, 2004.
7. Viswanathan, A. *Kalithogai: Source and Text*. New Century Book House, 2004.
8. Mohan, R. *Pathuppattu: Source and Text 1*. New Century Book House, 2004.
9. Nagarajan, V. *Pathuppattu: Source and Text 2*. New Century Book House, 2004.
10. Indirasithu, K. *Salem District Folk Songs*. Thamizharsi Publications, 2000.
11. Dakshinamurthy, A. *Tamil Civilization and Culture*. Tamil Land Publications, 2000.
12. Pillai, K. K. *History and Culture of Tamil Nadu*. International Institute of Tamil Studies, 2011.
13. Varadarasanar, M. *Thirukkural Explanation*. Kazhaga Publications, 2003.